RESEARCH ARTICLE

IOR PRESS
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
OPEN ACCESS

# ராஜம் கிருஷ்ணனின் 'வேருக்கு நீர்' நாவலில் லட்சியவாதமும் நடைமுறைவாதமும் - ஓர் ஆய்வு

ஜி.எஸ். தர்ஷனா [அ, *], பி. விமலா [அ]

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத் துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை- 600032, தமிழ்நாடு, இந்தியா

# Idealism and Pragmatism in Rajam Krishnan's Verukku Neer - A Study

G.S. Tharshna [a, *], P. Vimala [a]

[a] Department of Tamil, Chellammal Women's College, Guindy, Chennai- 600 032, Tamil Nadu, India.

* Corresponding Author:

Received: 10-11-2025
Revised: 27-02-2026
Accepted: 05-03-2026
Published: 16-03-2026

Check for updates

**ABSTRACT**

Novel literature serves as a mirror reflecting life's realities, relationship complexities, inner feelings, social pressures, and political, historical, and cultural changes. Writer Jeyamohan states that the purpose of a novel is to "transform the reader into a realized being". In this context, writers like Rajam Krishnan, Ambai (C.S. Lakshmi), and Kutti Revathi are unique in highlighting social evils. This research paper aims to analyze the conflicts and struggles between Gandhian idealism and pragmatism in Rajam Krishnan's Sahitya Academy Award-winning novel Verukku Neer.

**Keywords:** Satyagraha, Non-violence, Idealism, Pragmatism, Revolution, Gandhian Philosophy, Rajam Krishnan.

## முன்னுரை

இந்திய இலக்கியப் பரப்பில் “நான் கற்பனையில் வாழ்ந்தவளல்ல; மண்ணில் வாழ்ந்த மனிதர்களின் கதையைத் தேடிச் சென்றவள்.” என கள ஆய்வு செய்து நாவல் படைப்பதில் முன்னோடியாகத் திகழ்பவர் ராஜம் கிருஷ்ணன். அவரது 'வேருக்கு நீர்' நாவல், "நவீன இந்தியச் சமூகச் சிக்கல்களுக்குக் காந்தியத் தீர்வுகள் இன்னும் சாத்தியமா?"என்ற கேள்வியை எழுப்புவதோடு நவீனலட்சியம் என்பது வேர் போன்றது அது கண்ணுக்குத் தெரியாமல் சமூகத்தைத் தாங்கி நிற்கிறது என்பதை இந்நாவல் உணர்த்துகிறது. இக்கட்டுரை 'விளக்கமுறை ஆய்வு' மற்றும் 'பகுப்பாய்வு முறை' அடிப்படையில் அமைந்துள்ளது.

## லட்சியவாதம்: காந்தியத்தின் மறுமலர்ச்சி

நாவலின் நாயகி யமுனா, காந்திய லட்சியங்களின் அடையாளமாகப் படைக்கப்பட்டுள்ளார். "விடுதலை என்பது தனிமனித ஒழுக்கத்தின் உயர்வு" என்ற காந்தியச் சிந்தனையை யமுனா பிரதிபலிக்கிறாள். சந்திர மண்டலப் பயணத்தை விட ஏழை மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடமே முக்கியம் என்பதை யமுனா சுட்டிக்காட்டுகிறாள். பாரதியின் 'புதுமைப் பெண்ணாக' நிமிர்ந்த நன்னடையும் திமிர்ந்த ஞானச் செருக்கும் உடைய அவள் லட்சியவாதத்தை முன்மொழிகிறாள்.

## நடைமுறைவாதம்: சமூக எதார்த்தமும் வன்முறையும்

சுதீர் என்ற கதாபாத்திரத்தின் மூலம் இன்றைய நடைமுறை உலகின் கோபத்தையும், மாற்றத்திற்கான அவசரத்தையும் ஆசிரியர் பதிவு செய்துள்ளார். அஹிம்சை என்பது கோழைகளின்

சாக்கு என்று வாதிடும் சுதீர், ரத்தப் புரட்சியே தீர்வைத் தரும் என்கிறான். வைரமுத்துவின் வரிகளைப் போல,

"வசதி படைத்தவன் தரமாட்டான்

வயிறு பசித்தவன் விடமாட்டான்"

என்ற வர்க்கப் போராட்டத்தின் எதார்த்தத்தை நடைமுறைவாதம் பேசுகிறது.

## சமூக முரண்களின் சித்தரிப்பு

ஆய்வாளர் ராஜம் கிருஷ்ணன், ஒருபுறம் மேல்தட்டு மக்களின் ஆடம்பரத்தையும், மறுபுறம் தொழிலாளர்களின் வறுமையையும் ஒப்பிட்டு, காந்திய லட்சியவாதம் ஏன் நடைமுறையில் சிதைக்கப்படுகிறது என்பதைக் கள ஆய்வின் மூலம் நிறுவுகிறார்.

## முடிவுரை

லட்சியவாதத்திற்கும் நடைமுறைவாதத்திற்கும் இடையிலான போராட்டமே மனித நாகரிகத்தின் வளர்ச்சி. 'வேருக்கு நீர்' நாவல், லட்சியவாதம் தோற்றுவிட்டதாகத் தோன்றினாலும், அறம் மற்றும் அஹிம்சை எனும் 'நீர்' பாய்ந்தால் மட்டுமே சமூக மரம் பிழைக்கும் என்பதைச் சான்றுகளுடன் விளக்குகிறது. காந்தியம் காலாவதியானதல்ல, அது எக்காலத்திற்கும் தேவையான 'மறுவரையறை' செய்யப்பட வேண்டிய தத்துவம் என்பதை ஆய்வு புலப்படுத்துகிறது.

## References

Bharathiyar, (2000) Bharathiyar Kavidhaigal, Annai Puththagalayam.

Jeyamohan, (2009) Novel Kotpaadu, Kizhakku Pathippagam.

Rajam Krishnan, (1989) Verukku Neer, Gowra Pathippagam.

Vairamuthu, (2019) Thamizhar Aatruppadai, Surya Literature Pvt.Ltd.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License